உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

உ புத்தகம். சஞ்சிகை ௰௫] ௲௮௱௪௰௨ ஆவணி. ௪, தேதி வியாழக்கிழமை, Thursday, August, 4, 1842 [Vol II No 15

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 165

இந்தப் பிரகாரம் மதுரை ராச்சியமானது கல்லல்பட்டிருக்கிற ஸ்திதியில, அத்துமின்றி எல்லைப்புரட்டிக்கொண்டவர்கள் சேதுபதி ஒருத்தன மாத்திரமேயல்ல, அடுத்த தேசமாகிய திருநெல்வேலியிலுங் கூட நாயகமாருடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்த மதுரையினின்றும பிரிந்துபோய்விட்டது. இப்படிப் பிரிந்துபோனபோதைக்கும் மறுபடியும இந்தத் தேசத்தைத் திருப்பிக்கொண்டார்கள் பின்பு சுவாதீனமாயிருந்த ஒரு பாளயக்காரன் அந்தத் தேசத்தைத் தனகைவசப்படுத்திக்கொண்டான் எதுவரைக்குமென்றால இந்தப பரத வருஷத்திலே தெக்கண கண்டத்திலே கானாடக நபாபினுடைய அதிகாரம வியாபித்த வரைக்குந்தான அப்புறம் இந்த நபாபினுடைய அதிகாரங்களும் இவனுடைய மற்றச் சுதந்திரங்களும் இங்கிலீஷ் துரைத்தனத்துக்குள்ளாக்கப்பட்டன. மேலும இந்த ராமநாதபுரமுந் திருநெல்வேலியுமல்லாமல் இன்னும அநேக சின்னப பாளயபபட்டுகளுந் தனனரசாகவேயிருந்தன முதலாம் நாயகன் மதுரையைச் சுவாதீனம் பண்ணிக்கொண்டதின் பேரிலே மதுரையின பூர்வீக துரைத்தனத்தார்கள செய்த குற்றத்துக்குப் பகைதீர்த்துக்கொள்ளும்படி ஐந்து இராசாக்கள் ஏகோபித்தார்கள். இந்தச் சிற்றரசு பாளயங்களெல்லாம் போன சதகத்தின மத்தியில இங்கிலிஷ் தண்டுகளை மிகவும வருத்தப்படுத்தின தெக்கண தேசத்துப பாளயக்காரரிற் சில பாளயக்காரருக்கு முன்னோர்கள் மற்றவர்களாரென்றால மதுரை ராசாங்கத்தைக் கடைசியிலே பாழாக்குகிறதற்கு வந்த விசய நகரத்து ஸ்தோமங்களுக்குக் கும்மக்குச் செய்த உபகாரங்களுக்கு பதினாறுஞ் சதகத்துக்கு மத்திய காலத்தில விசுவநாதநாயகன விட்டிருந்த ஊர்களிலிருந்தவர்கள்தான். கொள்ளையிடுகிறதிலேயும குறும்பு பண்ணுகிறதிலேயும் சீவனம்பண்ணுகிற இந்தச் சின்ன அதிகாரங்களைக் குறித்துத் திருநெல்வேலி தேசத்திலேயும திரிச்சிராப்பள்ளி தேசத்திலேயும (௭௨) பேரென்று சுதேஸ்தருடைய சாதனங்களிலே சொல்லப்படுகிறது அவர்களுக்குள்ளே அதது மீறின அதிகாரமிருந்தபடியால இவர்களுடைய இந்த எழுபத்திரண்டென்கிற தொகையானது அதிகரித்துங் குறைவுபட்டும எப்போதும மாறுபட்டும இருந்திருக்கவேண்டியதல்லாமற் சரியாயிருக்கவேண்டியது ஆரோக்கியமும மனித சஞ்சாரமுமில்லாத காட்டுக்குள்ளே அவர்களுடைய குடியிருப்பிருந்தபடியினாலேதான அவர்கள் பிழைத்திருப்பதற்கு ஏதுவாயிருந்தது மேலும் இந்தச் சுதேஸ்தருடைய துரைத்தனமானது அவர்கள் முழுதும்கெட்டுப்போகத் தக்கதாயிருந்ததில்லை ஆகையினாலே மூன்று சதக்க காலத்துக்குள்ளே இந்தப் பரத வருஷத்தின தெக்கணகண்டத்தை அநேகஞ் சில்லறை அதிகாரிகள் தங்களுக்குள்ளே பகுத்துக்கொண்டார்கள் இவர்களை அந்தத் திருடர் கூட்டங்களுக்குத் தலைவரென்று தானுஞ் சொல்லக்கூடாது அவர்களுக்குடந்தேற்றியாயிருந்து கொள்ளையடிக்கிறவர்கள் பயிரங்கமாய்க்கொள்ளையடிக்கிறதைப் பார்க்கிலும சில்லறைத் திருடர்களை மேன்மையானவர்களென்றெண்ணிக்கொண்டு அவர்களுக்கு அநேகம பேர் துணையாயிருந்தாலொழியக் களத்திலே ஒரு எதிரியுடன சண்டைபண்ணத் துணிவுகொள்ளுகிறதில்லை நிலங்களை உழுது பயிரிடுவதற்கு அதிகரு சோமபலுள்ளவர்களாயும் நிலைமையான வீடுகளைக் கட்டிக்கொள்ளாமற் கொள்ளையாடிச் சீவனமபண்ணினார்கள் ஆகையினாலே அவர்களுக்கெப்போதும சீவனத்துக்கேதுவாயும புகலிடமாயுமிருக்கிற அடவிகள் விருத்தியாகிறதற்கேயல்லாமல அவைகளை வெட்டியெறிகிறதற்கு எவ்வளவும இஷ்டமில்லாதிருந்தார்கள் ஆனபடியினால பாளயக்காரர் கைப்பற்றியிருந்த தேசங்கள் மனித சஞ்சாரமில்லாத இமசகரமான காடுகளாயப பரவிப் போகும்படியாயிருந்தது ஆச்சரியமல்ல. மேலுங் குடிவாழ்க்கை மார்க்கங்களை அபிவிர்த்திபண்ணுகிறதற்கு விவேகமுஞ் சத்தியுமுள்ளராசரீகமானது ஏற்பட்டிருக்கவேண்டியது அப்படியேற்பட்டிராவிட்டால உழைப்பாளிகளான சனங்களைக் காப்பாற்றுகிறதற்கு ஏற்கனவே யோக்கியமானவைகளென்று கொண்டாடத்தக்கவைகளுங் காவேரிக்குத் தெற்கேயிருக்கிறதுமாகிய நல்ல தேசங்கள் கிறிஸ்துமார்க்கமுண்டாக வெகுகாலத்துக்கு முன்னமே எந்த ஸ்திதியிலே இருந்தவைகளாகப பரமபரையாய்ச் சொல்லப்படுகின்றனவோ அந்த ஸ்திதியாய் மாறிப போயிருக்கவேண்டியதுதானே ஆகையினாலே அத்தேசங்கள் இராவணனுடைய சம்மந்தமான இராட்சதர்களும அனுமான் சம்மந்தமான வானரங்களும இன்னும ஒருதரம வாசம்பண்ண யோக்கியமான காடுகளாய விடத்தக்கவைகளேயல்லாமல மற்ற யாருக்கும் வாச யோக்கியமான ஸ்தானங்களாயிருக்கத்தக்கவைகள் அல்லவென்று நாம திரமாணித்துக்கொள்ளத்தக்கது

[இன்னும வரும.]

Life of Mohammed — மகமதுவின் சரித்திரம்

௰௫. அதிகாரம்.

(*The Koreish undertake a new Expedition against the Prophet—The battle of Ohod—Mohammed and his army entirely defeated—His followers murmur—The prophet's poor devices to retrieve the disgrace incurred in this action—Resolves it mainly into the doctrine of pre-destination*)

மக்கத்தில் உள்ளோர்க்குடிகள், மகமதுவுடன முன் பண்ணினயுத்தத்திற் தோல்விபோனதினால மெத்த மனமடிவும அவிசாரமுங்கொண்டு மகமதுவுக்கு விரோதமாகத் திரும்பவும படையெடுத்துப் போகவேண்டுமென்றெல்லாரும அவரவரே வேகங்கொண்டு மதினாவிலிருந்த தங்கள சத்துருக்களை முற்றிக்கைபோடும்படிக்காரம்பித்துப்போனார்கள் அப்பொழுது மகமது தானைகளின தொகை மிகுதியுங் குறைவாயிருந்ததினால, பட்டணத்தின மதிலுக்குட்பக்கமாக நின்று யுத்தம்நடப்பிப்பது திறமென்று மகமது தடைபண்ணினவேளையில, அவருடைய தானைகள் முன்னொருமுறையிற் செயானுகூலமடைந்ததினால இதிலுந் தாங்களே வெற்றியடைவார்களென்ற நம்பிக்கையினால அவர் பண்ணின தடையைக் கேளாமல வேகங்கொண்டு கூக்குரலிட்டு வெளியில்நின்று போர்நடப்பிக்கிறதற்கு நபியைக்கேட்டவுடனே அவரும பதியினமாய்ச் சம்மதித்து நீங்கள்தானே வெற்றியையடைவீர்களென்று நானம்பிக்கையுடனே சொன்னார் அப்பொழுது மதினாவுக்கு வடக்கே (௪) மயில தூரமாகிய ஒகட்டு (Ohod) என்றமலையிலே மகமதுவின இரணவீரர்கள் (௲) பேரும பாளயமிறங்கி ஒவ்வொரு வருணத்தவர்களும் மும்மூன்று கொடிகளையும பிடித்து அதிற பெரிய கொடியை நபிக்குமுன்னே கொண்டுபோமபொழுது மகமது நபியுத்ததைஆரம்பியுங்களென்று சொல்லுமளவும, தனுவேதத்திலமிகத்தேர்ச்சியடைந்திருந்த (௫௰) வில்வீரர்கள் தானையின முன்னணியிலே நின்றார்கள் அப்பொழுது மகமதுவுக்குவிரோதமான கோறிஸ்வங்கிஷத்தாரும் அதற்காயத்தமாய நின்றவேளையில அரபியருக்குள்ளே போர்த்தொழிலில மிகவல்லபமுள்ள (Caled) காலட என்பவன இராவுத்தர்க்கு முதலாளியாய நின்றான அப்பொழுது ஆபுசேபியனின மனைவியாகிய (Hinda) இண்டா என்பவளும,மக்கத்திறபேர்போந்த வேறும (௰௫) பெண்சனங்களும இடைவிடாமற் தமபுருக்களைத்தொனித்துத் துடிப்புகளைத் தைரியப்படுத்திக்கொண்டிருந்தார்கள் அவ்வேளையிற போருமாரம்பித்தது அதிசீக்கிரஞ் செயானுகூலத்தை யடைவீர்களென்று மகமதுவுந் தமது வீரர்களைத் திடப்படுத்தினார் அப்பொழுது மகமதுவின சத்துருக்களுடைய போரணி சற்றேகொலைந்து போனதினால மகமதுவின வளத்துக்கே வெற்றிகிடைக்கிறது போலிருந்தது அப்பொழுது முன்னணியினின்ற வீரர்கள் தங்களுக்குத்தானே வெற்றிகிடைத்துவிட்டதென்றெண்ணி யாவருமவரவரே இரணகளத்தில அங்குமிங்குஞ் சிதறிப்போனார்கள் அப்பொழுது அவர்களுடைய சத்துருக்களிலொருவனாகிய காலட என்பவன் செயமடைகிறதற்குத்

ருணமிருந்தானென்றெண்ணித் தனது குதிரைப்படைத்தானையை மகமது சேனையின் முன்னணியில் விட்டுப் பிறகு "மகமது கொல்லப்பட்டான்" என்று உரத்த சத்தமாய்க் கூவென்று சொன்னான் மகமது செத்தானென்ற இந்தப் புரளியான வீண்கதை எங்குமெட்டினதினால் அவரைச்சார்ந்த துணைவர்களெல்லாரும் தைரியவீனப்பட்டு அங்குமிங்குங் கலைந்து ஓடினார்கள் அப்பொழுது மகமது இதைக்கண்டு தன்னுடைய தடுப்புகள் கொலைத்தொடாதபடிக் குப்பணணியுங் கூடாமற்போயிற்று

மகமதுவுந் தைரிய பராக்கிரமத்துடன் போர்செய்தார் மோசத்துக்கெல்லாந் தாமே எதிர்த்துநின்றார் ஒரு கைவேலினாலே முகத்திற் காயமும்பட்டார் ஒருகல்லு அவருடைய பற்களையுடைத்துத் தவிடுபொடியாக்கிப்போட்டது. அவர் குதிரையாலும் விழுந்துகிடந்தார் அவ்விடத்திலே அவருடைய அநுசாரிகளில் அநேகர் அவரைக்காவல்கொண்டு மறு இடத்துக்குப்போகாவிட்டால் அவரன்றைக்குச் சாவடைவதே நிச்சயம் இது சத்தியம். அவருடையபோர்வீரர்களில் (௭௰) பேர் களத்தில் மடிந்தார்கள் நபியின் சிறப்பப்பனாகிய காம்சா (Hamza) என்பவனும் மடிந்தவர்களிலொருவன் அனைவரும் அவஸ்தையான உயிர்சேதத்துக்கப்பட்டிருந்தார்கள் அநுசாரிகளுங் காரியத்தைக் காணக்காண முறுமுறுக்கத் தொடங்கினார்கள் நபியோ தங்களை அனுப்பிப் போட்டாரென்றுமெண்ணங்கொண்டார்கள் சனங்களுமிப்படிப்போக, மகமதுநபியுஞ் சனங்கள் செய்துகொண்ட பாவத்தினாலே இப்படிவந்ததென்றார். ஆண்டவனிப்படியெல்லாஞ் செய்தது அவர்களுடைய விசுவாசபத்தியைச் சோதிக்கிறதற்கென்றுஞ் சொன்னார்

இதைப்பற்றிக் கோறானிற் சொல்வதைக்கேளுங்கள் * ஒகட்என்னுமலையிலே விசுவாசிகளுக்குச் சம்பவித்தபிறகும் இதெல்லாமெங்ஙனமிருந்துவந்ததென்று கேட்கிறீர்களா? அதற்கு மறுமொழி இதெல்லாமுங்கள் வசமாய்வந்தது ஏனெனிற் பராபரன் சருவவல்லமையுள்ளவர் பராபரன் தமக்குச் சொந்தவர்களாரென்றுஞ் சேராதவர்களாரென்றும் அறிகிறதற்கே இப்படிச்செய்தார் ஒகட்டிலே யுத்தம்நடந்தவேளையில் உங்களிற்சிலர் பொல்லாப்புச்செய்ததினாலேதான் தோற்றோடிப் பின்காட்டினீர்கள்

தங்கள் தங்கள் ஆட்கள் இரணகளத்திலே மடிந்துபோனார்களேயென்றெண்ணிப் புலம்புவோர்க்கு மகமது சொன்ன புத்தியாவது "செத்தவர்கள் போருக்குவராமல் வீட்டிலே ஒளித்திருந்தாலும் அவர்கள் தலையில் விதிப்படி அன்றைக்குச் செத்துத்தான் போவார்கள்" இதைப்பற்றியுங் கோறான் கூறுவதைக்கேளுங்கள் * "சத்தியவிசுவாசிகளே, விசுவாசியாதவர்களைப்போல நீங்களுமிராதையுங்கள் பராபரனுத்தரவுகொடாமல் ஒருவனுஞ் சாவதேயில்லை ஒவ்வொருவருடைய தீர்ப்பும் புத்தகத்திலேதான் வரைந்திருக்கின்றது ஒகட்டிலே மடிந்துபோனார்களென்று நீங்கள் நினைத்தவர்கள் சாவதேயில்லை அவர்கள் தங்களுயிருடன் ஆண்டவனிடத்துக்குப் போய்விட்டார்கள். பராபரனுடைய தயவு அவர்களுக்குக் கிடைத்தபடியால் மிகுதியுஞ் சந்தோஷப்படுகிறார்கள்" இன்னுங் கோறான் சொல்வதாவது "இராசிக தெய்வீகமொன்று மனிதருக்குப் பூமியிலே சம்பவிக்கிறதில்லை நாம் சிருட்டிக்கப்பட்டமுன்னமேதான் எங்கள் தீர்ப்புப் புத்தகத்திலேதானே எழுதியிருக்கின்றது"

* கோறான் ௩ அதி.

* கோறான் ௩ அதி.

கூட்டேன்பவர் செய்த பிரபஞ்சநூல்

[Abridgement of Good's Book of Nature.]

இரண்டாம்பிரிவு.-௯ம் அதிகாரம். மனிதசாதியின் விசேடலட்சணங்கள் ௱௫௧ம். பக்கத்தினின்று.

௰௬ இவ்விதமையிருப்பதினாலும் அது வாயுப்புரையுடன் சார்ந்திருப்பதினாலும் குரங்கினங்களாற் சற்றேனும்பேச ஏலாது ஆம் மற்றும் யாதோ ஒரு காற்கான் மிருகத்திலும் இது தீர்க்கமான சத்தமிட ஏலாததாயிருக்கின்றது. மனிதனை குரங்கிலிருந்து தோற்றினானென நிறுத்தும் விஞ்ஞானாசிரியரொவ்வொருவரும் தம் மதத்தை நாட்டுவதற்குமுன்னே அம்மிருகங்களிலொன்றைப் பேசப்பயிற்றுவதே முறை.

௰௭. மனிதருக்குங் குரங்கினத்திற்குமுள்ள பிரிகொருதற்பவவிகற்பமென்னவெனில், பின்னையதாய குரங்கினத்திற்குப் பாதங்களில்லை அவை ஏறுகிறதற்கேற்றவளவாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. குரங்கின் நாலுகால்களின் நுனிகளுங் காரியத்தளவிலே கைகளேயாம் மனிதன் நிறுதிட்டமாய் நடக்கிறதற்குதவுவது காற்பெருவிரலே, ஆனாலும், ஒறன் அவுற்றங் இலேயோ இது சுத்தகைப்பெருவிரலாயிருக்கின்றது.

௰௮ ஆதலால் மனிதன் வேற்றினமாயிருக்கின்றான். அவன் நிறுதிட்டமாய் நடப்பதற்கே யுண்டாக்கப்பட்டான் அவனுடைய மூளையிலே பகுதிகளும் பூரணலட்சணங்களுமுண்டு, அவை பிறமிருகமொன்றற்கேனுமில்லை அவன் பேசவுங் காரியங்களை அளவிடவும் தன் சிருட்டிகரை வணங்கவுங் கூடும். ஆயினும் வேறுவினா ஒன்றெழும்புகின்றது மனிதரனைவரும் ஒரேமரபுவழியார்? அப்படியானால் நாமிப்பொழுது காணும் விகற்பங்களுக்குக் காரணம் யாதோ? அவ்வவ்வினங்களுடையவும் சாதிகளுடையவும் முகச் சாயல் வடிவங்களிலே வேறுபாட்டை யுண்டாக்கினதேதோ?

௰௯. நாம் அறிந்த பிரதானகாரணங்கள் பின்வரும் நாலுமே. அவை பூமி, உணவு, சீவியம்விடும்விதம், மரபுவழியாய் வரும்வியாதிகள் பூமியானது தோல்நிறத்தையும் மிகுதிபற்றி ஆள்வளர்ச்சியையும் அதிகரிக்குமிலட்சணமுடைத்தாயிருக்கின்றது உட்டண பூமிப்புறங்களிலே சகலவித ஆழிய நிறங்களும் சைத்திய பூமிப்புறங்களிலே சகலவித மென்னிறங்களுங் காணலாம். எங்கள் பூமிப்புறத்திலேயும் எங்கள் மேவிலே வெயிற்பட்டுவந்தால் அத்தோல் புகராய் அல்லது புள்ளிபட்டுப்போகின்றது. எங்கள் தோல் வெள்ளையாயும் அழகியதாயும் இருக்கவேண்டுமானால் நாம் சுடுவெய்யிலிலே காயப்படாது

௨௰ பூண்டுகளும் அவைபோல் மனுஷ்னும் அப்படியே பல மிருகங்களும் நிழலிலே வெளிறாகின்றது நிரட்சரேகையைச் சார்ந்த உட்டணபூமிகளிலுள்ள பறவைகள், மிருகங்கள், புட்பங்கள் ஆம், மச்சங்கள் கூடத் தங்கள் புள்ளிகள், இறகுகள், இதழ்கள், செதில்களிலே உலகத்தின் மற்றும் புறங்களிலுள்ளவற்றைப்பார்க்கிலும் அதிக [illegible]லக்கநிறமுள்ளனவாக இருக்கின்றன

௨௧. நிறத்தைத்தரும் முதலடை நிலைபயதார்த்தமென்னவெனில், தோலினது இடைப்படையாயிருக்கின்ற வன்னநீரே என அறிந்துகொள்க. இது பலவிதயிருக்கங்களிலேயும் வேற்றுவகைச் சாதிகளிலேயும் மனிதருள் ஆட்களிலேயும் விகற்பம் விகற்பமான தடிப்புள்ளதாயிருக்கின்றது. இது மிகுதியாயிருக்கிறவிடங்களிலே சூரியனுடைய சூடும் ஒளியும் மட்டாய்ப் பட்டுவரும்போது வடிவமானது இருள்கொண்டு உரத்துத் தோற்றத்திலே நெய்ப்பற்றுள்ளதாயிருக்கின்றது தோலினிறத்தினாலே மயிரும் ஒற்றுமைநலமாய்ப் பிரேரகப்பட்டு உரத்துக்கரியதாகின்றது

௨௨. வேற்றுவகையுணவுகள் வடிவத்தின்மேல் அதிகரிப்புடையதாயிருக்கின்றது எண்ணெய்யும் மஸ்துக்களும் பரிமாறினால் அரையீரலிலே சேட்டைகளையுண்டாக்கி மிகுந்த பித்தநீரைச் சுரவாங்கமும் பரப்புகின்றன மாமிசமே முற்றும் புசித்துவருகிறவர்களுக்கு உரத்தவடிவமுண்டு பாவனை பழக்கங்களிலுள்ள வேறுபாடும், மனிதருடைய புறவடிவத்தின்மேலும் மனநடைகள்மேலும் அதிகரிப்புடைத்தாயிருக்கின்றது. பூமியெங்கும் கிறிஸ்துமதமே தலைப்புகுந்து சகலமனிதரும் அதன் விதிப்பிரமாணங்களுக்கமைந்து நடப்பரேல் வினைவயதிறகுரிய தேறுதல் காரணமாய்ச் சடத்திற்குரிய விமரிதமான மாறுதல்கள் பிறக்கும்

௨௩ சத்தியகிறிஸ்துமதம் மனிதரனைவரையுஞ் சகோதரராக்கச் சாதிகளின்ங்கள் குலங்களென வரம்புமோ அழிந்துபோம். மரபுவழிபற்றியே மனுசசாதிகளுள்ளே குலப்பிரிவுகளும் விசேடலட்சணங்களுந் தோன்றுகின்றன இரத்தரோகம், க்ஷயரோகம், பிளவை, குட்டம், விசர் போலும்வியாதிகள் பெற்றார் அல்லது பிதிர்வழியாற் பிள்ளைகளிலுந் தோன்றநாம் காணகிறோமே.

௨௪. அதுபோல மனம் புத்திகளின்சாயல் வடிவம் [illegible]ங்கம் இலட்சணங்களும் ஒருமட்டுக்குப் பிள்ளைகளிலுந் தோன்றுகின்றன அப்படியே தற்செயலால் அல்லது யாதொரு பரோகாரணத்தால் ஒரு மனுடனிலே நிலைபட்ட விசேடலட்சணங்களை அவனுடைய பின்சந்ததியாருள்ளுந் தலைப்பட்டுவரும். இது மூலமாய், மனுசசாதிக்குள்ளே இப்பொழுது தோன்றும் பலவிகற்பங்களுக்கும் யுத்திகேற்பக் காரணநாட்டலாம்.

௨௫ உருபு சாயல்களைப்பற்றிய இவ்விகற்பங்கள் நிகழ்வது மனிதனில் மாத்திரமல்ல. நாய், ஆடு, பன்றிச்சாதிகளிலேயும் மனுவகையிலே காணக்கூடியதுபோல வடிவு நிறவிகற்பங்கள் தோன்

றுகின்றன காப்பிரியுடையவும் ஏரோப்பியனுடையவும் தலையோட்டிற்குள்ள வேற்றுமை, காட்டுப்பன்றியினதும் வீட்டுப்பன்றியினதும் தலையோட்டிற்குள்ள விகற்பத்தைப்பார்க்கிலும் யாதோர் காரணத்தால் மிக்கனவல்ல ஆயினும் அவ்விரண்டும் ஒரே சாதிவகையிலுள்ளன

௨௬ மனிதரிலுள்ள வேற்றுவேற்றுச்சாதிகளின் அந்தர்க்கரணங்களிலே வெளிப்படையான மிகுவேற்றுமையுண்டென்பது நிச்சயம். மனதின் சாயல் அல்லது புத்தி விருத்தி சரீரத்தின் சாயல்கள் தோன்றியனபோல் ஒருமட்டுக்குச் சந்ததி சந்ததியாய் வரும் என்று அறிக. புத்தியும் மடைமையும் விவேகமும் மூடத்துவமும் சந்ததி சந்ததிவழியாய் வருகின்றன ஆனாலும், சரீரத்தைப்பார்க்கிலும் மனமானது சாதனையால் ஏற்றங்கொள்ளும் ஒரு சந்ததியின் மனோகருவி சேட்டைகொள்ளத் தொடங்கில் அதன் பின் வரும் சந்ததியிலே அது காரியப்படத்தோன்றும்.

௨௭ ஏரோப்பையர் மனோகருவிகளிலே தலைமையடைதற்கு ஏதுயாதெனில் அக்கருவிகளைத் தொழிற்படுத்தற்காயின்ற விருத்தாந்தங்களே, தமிடமாகவேண்டுமென்ற முயற்சிகளும் கிறிஸ்துமார்க்கத்தின் அதிகாரிப்புமே வெள்ளைக்காரருடைய மனோகருவிகளைப் புலப்படுத்தற்குரிய தலைமை ஏதுக்களாயிருந்தன.

௨௮ புகர், சிவப்பு, கறுப்பு, பிங்கலம் எனும் வன்னத்தாரில் ஒவ்வொருவனுந் தன்னாலியன்றளவு இஷ்டம் கிறிஸ்துமதம் என்பவற்றின் விதைகளைத் தன்னிருதயத்தில் வித்தட்டும் அப்பொழுது யாவரும் ஒரு நிகராகித் "தேவன் சகலசாதியாரையும் ஒரே இரத்தத்திலிருந்து பிறப்பித்தார்" என்றுணர்ந்துரைக்கக் கற்குமளவும் மனனயமான வெள்ளைக்காரச்சாதிக்கு நிகராவார்கள்

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

PART II.] *Varieties of the Human Race.* [CHAP. 3.

(Continued from page 111)

16. In consequence of this pouch, and its connection with the larynx, it is impossible with the monkey tribe ever to speak, indeed it is less capable of making an articulate sound than almost any other quadruped. Every philosopher who maintains that man originated from monkeys ought, before he publishes his opinion, to be obliged to teach one of these animals to speak.

17 Another essential difference between men and the monkey tribe is this the latter have no feet,—they are formed only for climbing, and the terminations of their four supporters are, in fact, hands, the great toe is that which assists man in walking erect, and this is a perfect thumb in the orang outang.

18 Man is, then, a distinct race he only was formed to walk upright, his brain has parts and perfections which no animal possesses, he can speak, and reason, and worship his Creator. But another question arises Are all men of the same race?—And if so, what has been the cause of the diversity we find? What has made such a difference in the features and complexion of different tribes and nations?

19 The chief causes we are acquainted with are the four following climate, food, manner of life, and hereditary diseases *Climate* has a great influence on the color of the skin, and often on the stature of men. All the deepest colors are to be found in hot climates, all the lightest colors in cold ones. We see in our own climate, that an exposure to the rays of the sun will turn the skin brown or freckled If we wish to have the skin fair and white, we must not be exposed to the hot sunshine

20. Plants, also, whiten in the shade, as well as man, and so do many animals. Indeed, the birds, beasts and flowers, and even the fishes of the hot climates under the equator, are brighter colored in their spots, feathers, leaves, and scales, than we find them in any other part of the world

21. The immediate matter of color, you will recollect, is the pigment, which forms the middle layer of the skin. It differs in thickness in different kinds of animals, and in the different nations and individuals among men. Wherever it is most abundant, the complexion, upon a common exposure to the heat and light of the sun, becomes darker, and coarser, and greasier in its appearance The hair is usually influenced by the color of the skin, and becomes also coarser and darker.

22. *Different kinds of food* have a great effect upon the complexion. Oils and spirits produce an excitement of the liver, and hence throw a great deal of bile into circulation. Those who live almost wholly on animal food have a coarse complexion. The difference, too, in manners and customs has a great effect on external appearance, and on the minds and character of men If the Christian religion could be introduced over the whole world, and all men would obey its divine precepts, astonishing physical changes would be produced by moral improvement.

23 True Christianity will make all men brethren, and then the barriers between castes, and tribes, and nations will be broken down, and it is from *hereditary* sources that almost all distinctions and peculiarities among the human race originate. We see diseases, such as gout, consumption, scrofula, leprosy, and madness, are inherited by children from their parents or ancestors

24 So likewise, the features, complexion, shape, and the qualities of mind and disposition are inherited in a great degree, and likewise the peculiarities, which accident, or some mysterious cause has stamped on one human being, will be transmitted to many succeeding generations In this way, we can rationally account for the great differences now to be found among the various races of mankind

25 Man is not the only animal in which such variations of form and feature occur The dog, the sheep, and the swine genus especially, show as great diversities in the frame and color as can be found in the human species. The difference between the skull of a negro and that of a European, is in no respect greater than that which exists between the skull of a wild boar and that of the domestic swine, yet these both belong to the same species.

26. There is, to be sure, a great apparent difference in the intellectual faculties of the different varieties of man. But remember that the features or talents of mind are inherited, in a great degree, as well as the features of the body. Wit and dulness, genius and idiotism, run in direct streams from generation to generation. But the mind, even more than the body, may be improved by cultivation, and when the intellect of one generation is called into exercise, it will have a striking effect on the succeeding

27 The European race owes its superiority in mental powers to circumstances which have called those powers into action The efforts to obtain personal liberty, and the influence of the Christian religion, have been the chief means of perfecting the faculties of the white man.

28. Let him then, as far as possible, plant the seeds of

freedom and Christianity in the hearts of every people, and then the *brown*, the *red*, the *black*, and the *tawny* man will assimilate with each other, and with the more favored white race, till they learn to *feel*, as well as acknowledge, that ' God hath made of one blood of all nations of men."

இலங்கைத்தீபக கிறிஸ்துசமயோற்பவ விருத்தாந்தம்

THE HISTORY OF CHRISTIANITY IN CEYLON.

Translated from the "Friend"

Continued from page 167

அச்சுவேலிக் (Atchuvaly) கோவில் கல்லாற் கட்டப்பட்ட பெரிதும் உயர்வுமான கட்டுவேலையாயிருக்கின்றது. அது (உ௲) பேர் இருக்கத்தக்க விசாலமான கோவிலாயிருக்கின்றது. அதை உலாந்தாக்காரர் கட்டிமுடித்தார்கள் இந்நாட்டிற் சில விருத்தப் பிராமணர் இருந்தமையாற் சனங்கள் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்து நடப்பதில் மிகவும் பிரியங்கொண்டவர்களாயிருக்கவில்லை. பிலிப்பு என்னு நாமமுள்ள ஒரு பிராமணன் சத்திய வேதத்தின் உண்மைகளை அறியாமல் வேதத்திலுள்ள போதகத்துக்கடுத்த பிரிவுகளைப் பார்க்கச் சரித்திரப் பங்குகளில் அதிகம் பிரியமுள்ளவனாயிருந்தான் ஒரு கவிராயப் பிராமணன் ஞானஸ்நானம் பெற்று மறுபடி நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நடையையுங் குணத்தையும் பற்றிய சரித்திரத்தைக் கவிதையாய்ப் பாடிவைத்தான்.

உடுவில் (Oodooville) கோவிலுக்கருகேயுள்ள பெரிய வீட்டில் முன்னொரு பிறஞ்சீஸ்கன் சன்னியாசி (Franciscan Friar) ஒருவர் இருந்தார். இவ்விடத்தில் இஸ்தாப்பித்திருந்த பள்ளிக்கூடத்தில் மாணாக்கர் (௬௱) பேரும், பிரசங்கம்பண்ணும்வேளையில் (௲) சனங்களும் வந்து கூடுவார்கள் இக்கோவிற்பற்று இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் தலங்களில் ஒன்றாயிருக்கின்றது இவ்விடத்திலே பெண்பிள்ளைகளைத் தருமத்துக்குப் படிப்பிக்கிற ஒரு பெரிய பள்ளிக்கூடமுமிப்போதிருக்கின்றது.

வட்டுக்கோட்டைக் (Batticotta) கோவிற்பற்றிலே ஒரு பெரிய அலங்காரமான கோவிலிருந்தது. அடுத்தாப்போலே வேறொரு உயர்ந்த வீடுங் கட்டப்பட்டிருந்தது. அவ்விடத்திலுள்ள பள்ளிக்கூடங்களிற் படித்த பிள்ளைகளினது தொகை ஏறக்குறைய (௯௱) பிரசங்கங் கேட்கும்படி வந்துகூடினவர்களும் ஏறக்குறைய (உ௲) பேருண்டு. இது இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் தலங்களில் ஒன்றாய் இருக்கின்றது. இவ்விடத்தில் (௲அ௱உ௰) ஆண்டளவில் ஒரு பெரிய சாஸ்திரப் பள்ளிக்கூடத்தை அமெரிக்கன் போரட் (Board) சங்கத்தார் ஸ்தாபித்தார்கள். அதில் இப்பொழுது கிட்டத்தட்ட (௱) பிள்ளைகள் படிக்கிறார்கள். பற்பல கலவியிலுஞ் சாத்திரசூத்திரங்களிலு மிகவுந் தேறிவருகிறார்கள்.

பண்டத்தெருப்புக் (Pandirteripo) கோவிற்பற்றிலேயுள்ள கோவில் மெத்தச் சிங்காரமான வில்வளைவுள்ளதாய்க் கட்டப்பட்டது. இவ்விடத்திலுண்டாக்கிய பள்ளிக்கூடத்தில் (௬௱) ஆண்பிள்ளைகள் நாடோறும் படித்துவருவார்கள். அவர்கள் மிகவுங் கல்வியிலே தேர்ச்சிகொண்டவர்களானதினால் பாப்புமதத்திலுள்ள காரியங்களை நிராகரிக்கத் தகுதியினையுடையவர்களாயிருந்தார்கள். இவ்விடத்திலுள்ள சனங்களும் மெத்தத் தேவபத்தியுள்ளவர்களாயிருந்தபடியாற் பிரசங்கவேளைகளிற் கிட்டத்தட்ட (௲௯௱) பேருக்கு வந்து கோவிலிற் கூடிப் பிரசங்கங்களைக் கேட்பார்கள். இது இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் பிரயாசப்படுந் தலங்களில் ஒன்றாய் இருக்கின்றன

சங்கானைக் (Changany) கோவிற்பற்றிலே நல்லவடிவான கோவிலொன்று கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றது. செங்கல் மதிலாற் சூழ்ந்த வேறொரு வீடும் முற்றமும் அங்கே கட்டப்பட்டிருந்தது. அவ்விடத்திலுள்ள பள்ளிக்கூடங்களைப் பிரதானமாய் அம்புரோசியோ என்பவர் (Ambrosio) மெத்தச் சாவதானமாய்ப் படிப்பித்து வந்தார் இவ்விடத்திலுள்ள சனங்கள் தேவ காரியங்களில மெத்தச் சாக்கிரதையாயிருந்தபடியாற் பிரசங்கவேளைகளில் வந்து கூடுஞ் சனங்களை அடக்கிக்கொள்ளுகிறதற்கு அந்தக் கோவில் மெத்த விஸ்தாரமற்றதாயிருக்கின்றது

(இன்னும் வரும்)

பழமொழி

அஞ்சுகாசுப் பறக்குதிரையும்வேணும் ஆற்றைக்கடக்கப்பாயவும் வேணும்

அவசரகாரனுக்குப் புத்திமத்திமம்

அணிலேறவிட்ட நாய்பார்ப்பதுபோல

அத்தத்தினமிடுக்கல்லோ அம்பட்டன் பெண் கேட்டது.

அடிச்சட்டிக்குள்ளே கரணம்போடலாமா?

அடிமேலடியடித்தால் அம்மியுநகரும்.

அடப்புசாவ மகனைக் கப்புப்பிடிக்கிறது

ஆனையிருந்து அரசாண்டவிடத்தே பூனையிருந்து புலம்புகிறது

இல்லாதது பிறவாது அள்ளாதது குறையாது

உதரநிமித்தம் வெகுகிருதவேடம்

உடையவனில்லாச்சொம் ஒருமுழங்கட்டை

உப்புவாணிகனுக்குத்தெரியுமா கற்பூரவிலை

உரலில் அகப்பட்டதுலக்கைக்குத் தப்புமா?

ஊணனைக்குமமிழந்தான் உழுதுகன பெண்ணிழந்தான்

எள்ளேன் காய்கிறது எண்ணெய்க்கு எலிப்புழுக்கையேன் கூடக்கிடந்தகுற்றத்துக்கு

எலிக்குப்பயந்து வீட்டைச்சுட்டாற்போல.

எட்டாதபூத் தெய்வத்துக்கு

ஒருநாட்கூத்துக்குத் தலையைச் சிரைத்ததுபோல

கரணந்தப்பினால் மரணம்

கனவுகண்டபணம் செலவுக்குதவுமா?

கடுகுசிறுத்தும் காரம்போகாது

குடிக்கிறதுகூழ் கொப்பளிக்கிறது பனிநீர்

குருடனுக்குப்பால் கொக்குப்போல

குடிக்கிறதுகூழாம் இருக்கிறது சிங்காசனம்

(திருட்டாந்த சங்கிரகம்,)

கடிதங்கள்.

உறுக்கிய திறன்மொழிக்கு இறுக்கிய மறுமொழி

(On Tamil Grammar)

உதயதாரகை உஅ புத்தகம் சஞ் சஞ்சிகையில் திருவல்லைப்பாளிக்கூடம் ரு கதிரைவேற்பிள்ளை எழுதியபடி "ஒன்றறிவதுவே" என்னும் தொல்காப்பியச் சூத்திரம் பிழையாகத் தோன்றுகின்றது ஏனெனில் தொல்காப்பியத்தில் "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" எனவும்,—தொன்னூல்விளக்கம் உரிச்சொல்லியல் உஞ சூத்திரத்திற்கு மேற்கோளாக "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" எனவும்—நன்னூல் உரியியல் சஉ சூத்திரம் புனமரமுதலவுற்றறியுமோரறிவுயிர், எனவும்,—சூடாமணிநிகண்டு யஉவது கூஅஞ் செய்யுளில் 'உற்றறிபுலனொன்றுற்புனமரமேயோரறிவிற்சீவன்' எனவுமிருக்கின்றன இவற்றின் கருத்தென்னையெனின் "ஓரறிவுயிராகவான மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிகின்றவை."

இப்படித் தொல்காப்பியத்தில் "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" என்றிருக்கவும் அதற்காதாரமாக வேறநேக நூல்களிலிருக்கவும் மேற்சொன்ன கதிரைவேற்பிள்ளை இவைகளை அறியாமல் "ஒன்றறிவதுவேயொன்றறிவதுவே" எனப் பிழையெழுதியும், யகஞ சஞ்சிகையில் "பயனபமின்றிக இறுக்கிய கடாக்களை உறுக்கிய திறன்மொழி" என்று ஏழெட்டுமுளத்திலே ஒருபெயருமுண்டென்ணித் தாமெழுதினதற்குப் பொருளேதிறை சரிப்படவில்லையென்று கட்டினால் மருளகன்று தெருளுற்றிடவோர் விடையெழுதுவோம் என்று மனத்துணிவாகச் சொன்னார் ஆகையால் வேம்றயழகுழுடபொன்றும் பேசாமல் ஒன்றறிவது வேயென்றதற்குப் பொருள்சொல்வாராக அது தமது கைமோசம் அல்லது அச்சுக்கோத்தவர்களின் மோசமென்று சொல்ல இனிமேலிடமில்லை

இதுநிறக, தா. சிதம்பரபிள்ளைக்கு நான் சொல்லுகிறதென்னவெனில் 'தோறகாதுபோரவை துலைக்காதுமுட்டை" என்றது இராமாயணத்தில் இன்னபடலத்தில் இத்தனையாம் பாட்டிற்கண்டிருக்கின்றதென்றவர் சொல்வாராக இப்படிக்கு

துஅாசஉஆ ஆனிமீ } காரத்திகேயர் இராமலிங்கபிள்ளை
அதி }

Messrs Editors,

I have for several years been surprised to see how Christians of great eminence translate heathen books and pass off heathen words with a Christian sense, and then how they take their own translations and Christian interpretations for the ground of great praise, when a heathen never dreamed of those thoughts which pass through the Christian's mind when reading these translations The practical illusion and unfairness of this is, that heathens are encouraged to take the Christian interpretation and then turn round to the Missionary and say, Do not our poets say so? and even converts from among the heathens will quote a heathen stanza with a Christian interpretation instead of the Bible.

As evidence of what I say I beg to subjoin the definitions of அறம found in the Rev Dr Rottler's Dictionary, that your readers may understand the *meaning* of "Virtue" as given in the translations of the Cural which appear in your paper *An Old Observer.*

அறம, அறன, virtue, compare தருமம particularly, benefaction, charity, alms see பெயாகம, 27

Note—Thirty-two acts of charity are particularized viz

1. ஆதுலர்க்குச்சாலை.—Building poor-houses
2. ஓதுவார்க்குணவு—The giving of maintenance and education gratis
3. அறுசமயத்தார்க்குண்டி—Feeding those who belong to one of the religious sects *see* அறுசமயம.
4. பசுவுக்குவாயுறை—Feeding cows
5. சிறைச்சோறு—Feeding prisoners
6. ஐயம—Giving alms
7. திண்பண்டநல்கல—Providing for travellers.
8. அறவைச்சோறு—Feeding the destitute
9. மகப்பெறுவித்தல—Giving assistance in child-birth.
10. மகவுவளர்த்தல.—Educating children.
11. மகப்பாலவார்த்தல—Giving milk to infants *see* மக, an infant, மகச்சோறு, மகச்சோறளித்தல
12. அறவைப்பிணஞ்சுடுதல—Burying the poor.
13. அறவைத்தூரியம—Clothing the destitute
14. சுண்ணம—Distributing chunam used with betel
15. நோய்மருந்து—Curing diseases.
16. வண்ணார—Paying for washing the cloths of the poor
17. நாவிதர.—The same for shaving
18. கண்ணாடி—Giving a looking-glass.
19. காதோலை—Giving Cadjan, or Palmira leaves to women for their ears
20. கண்மருந்து—Giving medicine for the eyes.
21. தலைக்கெண்ணெய—Giving oil for the head
22. பெண்போகதானம—The bestowing of a virgin.
23. பிறர்துயர்காத்தல—Redressing injuries
24. தண்ணீர்ப்பந்தல—Keeping water-pandals, which are thatched places, where persons are stationed to give to drink to the thirsty
25. மடம—Erecting building for the reception of Bramins, Pandarams, Pilgrims, &c.
26. தடம—Making tanks
27. சோலை—Planting groves, topes, &c.
28. ஆவுரிஞ்சுதறி—Erecting stakes, at which cows may rub themselves
29. விலங்கிற்குணவு—Feeding all kinds of animals
30. ஏறுவிடுதல—Giving a bull for covering a cow.
31. விலைகொடுத்துயிர்காத்தல—Giving money to save life.
32. கன்னிகாதானம—Giving assistance towards a marriage.

(On Nydatham)

அளக்கர் புடைசூழுமளக்கரிடையெங்குமளக்கரும் பெருமைசேர் விளக்கொளித்தாரகை விரித்தருளியகத்திருளிரித்திடு மகா கனந்தாங்கிய துரையவர்களுக்குச் சந்ததம் வந்தனந் தந்தனம்

புலியரசன்னாட புரவலருள்ளும அதிவீரராம பாண்டியனாலியற்றப்பட்ட நன்னயக்கருமபெனும நைடதத்திடை, சந்திரோதயப்படலம், மன்மததாவலமபனப்படலம, சுயம்வரப்படலமென்னும இம்மூன்றுஞ் சொற்களுக்கும பொருள் விளங்காமையால் முற்றறிவுடையோராய மொழிவருமபெரியோர் சிற்றறிவுடையோனக் கிருபைவைத்து நலவிடையெனும நறு நெய்யை வார்த்தருள் செய்யக் காத்திருக்கிறேன். கடவுளே,

இங்ஙனம யாழ்ப்பாணம வயிரவநாதர் ஆறுமுகம்

(A Question on the Tract Spiritual milk)

முகாமைத் துரையே யான் எழுதுவதைப் பின்வருஞ் சஞ்சிகையில் திருத்திப் பிரசுரஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்

அவையாவன,

ஞானபால சஙம் விஞ

இறக்கும்பொழுது நமது சரீரமும ஆத்துமாவும் எங்கேபோகும?

விடை சரீரம அழிந்துமபோம் ஆத்துமா அழியாமல் நரகத்துக்கு அல்லது மோட்சத்துக்குப் போம இந்த விடைப்படி ஆர் மோட்சத்துக்கும் ஆர நரகத்துக்கும போவார்கள்—சச குடிசக சஎம விஞ விடைப்படி நடுத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் நடுத்தீர்த்தபடி பொல்லாதவர்கள் நரகத்துக்கும் நல்லவர்கள் மோட்சத்துக்கும போவார்கள் இதிலே ஞானதீபிகை வேதபொழிப்புப் படியாதபடி மலைக்கிறேன கற்றவல்லோர் இதிற் பிழைபாராதபடி விடையெழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன இப்படிக்கு

துஅாசஉஆ ஆனிமீ உயதி மயிலைக்கா
அப்பாக்குட்டி வேலாயுதன், வயது எ.

பத்திராதிபர் குறிப்பு.

அந்தகனுக்கந்தக மந்தகாரமெனக் கூறுவதமையாமைபோல அவிசுவாசிகட்கு வேதாந்தமமையாது. குணநிதரான கடவுள் கொடுத்த வேதம புலப்படுத்தமாயிருக்குமென விசுவாசிகளோர்ந்து

வேதத்துட்சமைந்த நியாயத்துக்கடைந்துநிற்பதன்றித்தமது கிஞ்சிஞ்ஞத்துவத்தைக் கொண்டு சருவஞ்ஞத்துவத்தைப் பரீட்சிக்கவும் மேவிடவும் எண்ணார்கள். ஆகையால் வேதவிசுவாசிகள் வேதவசனத்தைக்கொண்டே அசங்கியானத்தை நிவிர்த்தி செய்வது முறையெனக் கருதி முன்பவர்க்கு வேதத்தைக்கொண்டு உதாரணங்காட்டுதும். லூக்கா ௰௬ அதி. ௨௨ வச. பின்பு அந்தத் தரித்திரனென்பவன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலேகொண்டுபோய்விடப்பட்டான். மத். ௰௭ அ. ௩ வ. மோசே எலியா என்பவர்கள் அவரோடே பேசிக்கொள்ளுகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள். லூக்கா ௨௩ ௪௩. இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய். அப். ௭ ௫௯. கர்த்தராகிய யேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று மரித்தான். குறித்த வசனங்களினாலே தேகாந்தத்தில் ஆத்துமாக்கள் சுவர்க்க பாதலங்களிற் சேர்ந்து சுகதுக்கபோகஞ் செய்வதாய் விளங்குகின்றது. ௧ கொரி. ௰௫ சஉ.சஎ. மரித்தோர் உயிரோடெழும்புதலுமுண்டாயிருக்கும். அழிவுள்ள சரீரம் விதைக்கப்படும் பின்பு அழிவில்லாமையாயெழுந்திருக்கும். கனவீனமான சரீரம் விதைக்கப்படும் பின்பு மகிமையாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ள சரீரம் விதைக்கப்படும், பின்பும் பலமாய் எழுந்திருக்கும், சீவனுள்ள சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரமாய் எழுந்திருக்கும், இரத்தமாமிசமுடைய சரீரமுமுண்டு ஆவிக்குரிய சரீரமுமுண்டு. ௨ கொரி. ௫ ௰ அவனவன் தன் சரீரத்தினாலே நடப்பித்த நன்மைக்காகிலுந் தீமைக்காகிலுந் தக்கவைகளைச் சரீரத்திலே அடையும்படிக்குக் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டுமே. அப். ௰௭ ௩௧. ஒரு நாளைக் குறித்தார் அதிலே அவர் தாம் நியமித்த ஒருவரைக்கொண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுப்பார் அவரை மரித்தோரில் இருந்தெழுப்பினதினாலே அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். யோவா. ௫. ௨௮, ௨௯. இதைக் குறித்து ஆச்சரியப்படாதிருங்கள், என்னத்தினாலெனில், பிரேதக்குழிகளிலுள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது நன்மைசெய்தவர்கள் சீவனை அடையும்படிக்கும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படிக்கும் எழுந்து புறப்படுவார்கள். யோவான். ௬. ௩௯, ௪௦. அவர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகாமற் கடைசிநாளிலே அவர்களை எழுப்பும்படிக்கு என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கின்றது. குமாரனைக் கண்டு அவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் நித்திய சீவனை அடையும்படிக்கும் கடைசி நாளிலே நான் அவனை எழுப்பும்படிக்கும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கின்றதே. யோவான் ௰௧ அ. ௨௪ வசனம். மார்த்தாள் சொன்னாள், கடைசிநாளிலே மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும்பொழுது அவனும் எழுந்திருப்பானென்று அறிந்திருக்கிறேனென்றாள். அப். ௨௪ ௰௫. மரித்தோராகிய நீதிமான்களும் அநீதிமான்களும் மறுபடியும் உயிரோடெழுந்திருப்பார்களென்று இவர்களும் அடைந்துகொண்டிருக்கிற நம்பிக்கையைப் பராபரன்மேல் வைத்திருக்கிறேன். ௨ இரா. ௨. ௰௧. எலியா பெருங் காற்றிலே பரமண்டலத்துக்கு ஏறிப்போனான். ௧ தெசலோனி. ௪ ௰௬. அப்பொழுது கிறிஸ்துவில் இருந்து மரித்தவர்கள் முதலாவது எழும்புவார்கள். குறித்த வசனங்களினாலே மாமிசோத்தானமும் நடுத்தீர்ப்புமுண்டென்று விளங்குகின்றது.

சமரசம் மனிதர் யாவரும் ஆத்மதேகசம்பந்திகளாய் உட்கரணம் புறக்கரணமென்னும் இருவகைக் கரணங்களினாலும் நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும் சனன முதல் மரணபரியந்தமாகச் செய்துவருகிறார்கள். இவைகளை ஆத்துமாவாவது தேகமாவது தனித்து நடப்பிக்கிறதில்லை. ஆதலால் அவ்விரண்டும் கூடியிருந்து செய்த ஆசாரங்களின் பிரயோசனமாகிய சுகதுக்கங்களை அவ்விரண்டுங் கூடியே யருந்துவது நியாயமாயிருக்கும். அப்படி அவை அருந்தும்படி மாமிசோத்தானமும் நடுத்தீர்ப்புமுண்டாயிருக்கிறது. அந்த உயிர்த்தெழுதல் உலகாந்தத்திலென்று தேவன் நியமித்துக்கொண்டபடியால் தேகாந்தத்திலே தொடங்கி உலகாந்தமட்டும் ஆத்மா தனியே சுகதுக்கத்தை அனுபவிக்க இடங்கொடுக்கிறார். தேகாந்த முதல் உலகாந்தபரியந்தம் ஆத்மா தனியே சுகதுக்கபோகியாயிருக்கிறதென்றும் உலகாந்த முதல் அனவரதமும் தேக ஆத்துமாவாய்ச் சுகதுக்க சீவியம் பண்ணுகிறதென்றும் வேதத்தின் கருத்தென அடைந்துகொள்ளுகிறோம்.

சனிநீராடு

ஓர் சமரசம்

மகா கனம்பொருந்திய உதயதாரகாதிபரே,

அவ்வையாரருளிச்செய்த ஆத்திசூடியில் சனிநீராடு என்பதற்கு இயற்றமிழாசிரியர் ஸ்ரீ, ஸ்ரீ. இராமாநுசகவிராயரும், மகா கனம்பொருந்திய சரவசாஸ்திரப் பண்டிதராகிய, ம ஸ்ரீ ஸ்ரீ சரவணப்பெருமாளையருஞ் செய்த உரைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறதினாலே கற்பவர்கள் அதோ இதோ சரியென ஐயங்கொள்வதை நீக்கும்பொருட்டு உதாரணங்களெடுத்துக் காட்டி இவர்களிருவருரையில் இவ்வுரை சரியென எழுதத் துணிந்தேன். இராமாநுசகவிராயர் உரையின் கருத்து சனிக்கின்ற நீரிலே நீ ஸ்நானஞ்செய் இவ்வுரை தப்பு.

ஸ்ரீ, ஸ்ரீ. சரவணப்பெருமாளையரவர்களுரையின் கருத்து சனிக்கிழமையில் நீரிலே முழுகு இஃதே சரி என்பதற்கு உதாரணம், ஆத்திசூடி வெண்பா. "ஞாயிறுயிராகு கேதுதிங்கள் மாலருள்செய்கிலா செவ்-வாய் பிணிதுக்கங்குரு நாள்வாழ்வுபோம்-தூயவெள்ளி-போடிதெல்லாம் புன்னைவனபூபாலாமிக்கபுதனோடு சனிநீராடு" எ-ம். இன்னுமோர்நூலில் "அருக்கன் ஞாயிறழகழிக்குமழகார் திங்களழகுண்டாம்- செருக்குஞ்செவ்வாயுயிர்போக்குஞ் சேர்ந்தபுதனும் பொருளுண்டாம்-கருக்குமியாழன் கருத்தழிக்குங் காரு வெள்ளி நோயுண்டாம்- பெருக்கங்காணுஞ்சனியெண்ணெய் பேணியூற்றும் பெரியோரே" பிறருங் கூறினார். நான் பிற்கூறியதைக் கற்கும் மாணாக்கர் கைக்கொள்ளுவதே நலம். இப்படிக்கு

யாழ்ப்பாணம். ஆனிமீ ௰௧தி. சபூரசவிநோதன்.

(On Female Education).

உதயதாரகையே,

நீ ஒவ்வொரு நாட்டிலுமிருக்கிற படிப்பாளிகளையும் படிப்பற்றோர்களையுமதிநுட்பமாயாராய்ந்து அவர்கள் யுத்தி நுட்பத்தையும் புத்தித்திடத்தையுமதிதிட்பமாய் எங்களுக்கு அறிவிக்கிறாயே ஆயினும் என்போலும் பெண்பிள்ளைகள் சகல நூல்களையும் ஏரோப்பையிலிருக்கும் பெண்சனங்கள் பயிற்றப் பயின்று வருவதுபோல நடப்பிக்கவேண்டுமென்று நீ மிகப் பிரயாசப்படுகிறாயே உனக்கு நாங்கள் என்ன கைம்மாறுசெய்குதும் உன்னுங்கள் உய்குதும். அமெரிக்கன் குருமாரும் வெஸ்லியோன் குருமாரும் இவ்வூரில் வந்து பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுமென்று மிகப் பிரயாசப்படுத்திரிகிறதை இவ்வூரில் மூடாத்துமாக்கள் நன்மையென்றெண்ணாது உடுப்பிட்டி மணக்கன் வேலாயுதர் சின்னத்தம்பி தந்திரமாக ஆண்பிள்ளைகள் படிப்பிலே முயற்சிப்படாதபோது பெண்பிள்ளைகளைப் பற்றிப் பேசுவதெல்லை? என மறுமொழி சொன்னதுபோற் தங்கள் பிள்ளைகள் படித்திருந்தால் மிகக் கெட்ட நடத்தைக்குரியவர்களாய்விடுவார்களென்றெண்ணித் தந்தர மறுமொழி பேசுகிறார்களே ஐயோ! எழுதவும் வாசிக்கவும் இவ்வூரில் ஆண்பிள்ளைகளைப் பார்க்கிலும் அதிகங் கெட்டிக்காரராயுஞ் சகல சாத்திர சூத்திரங்களில் வல்லவர்களாயுமிருக்கும் ஏரோப்பை, அமேரிக்காவிற் பெண்பிள்ளைகளெல்லாரும் இப்பொழுது படியாமலிருக்கிற இவ்வூரிற் பெண்பிள்ளைகளைப்போற் கெட்ட நடத்தையுள்ளவர்களாயிருக்கிறார்களா? ஐயோ! சருவேசுரனே மேற்குறித்த சின்னத்தம்பியோனந் தந்திரிகளுடைய வீணான எண்ணத்தை மாற்றி நாங்களுந் தேவரீரை அறிகிற அறிவிலே வளரவுஞ் சகல நூல்களையும் இங்கிலிஷ்சாதிக்காரருடைய பெண்பெண்டாட்டிகளைப்போல் உணரவுங் கிருபைசெய்வீராக.

உதயதாரகையே, இடையினத்துக்கியார் விடையெழுதியும் தமிழ்நன்குணர்ந்த யாழ்ப்பாண மாணாக்கன் விடையே தளக்கலாகாமலையென நிற்கின்றது போலப் பெண்பிள்ளைகள் படிப்பதைப் பற்றி யாரென்னதந்துபண்ணினாலும் படிப்பதே நலமென எல்லாருக்குமறிவிக்குந் தரி அம்மாள் சொன்னதின்படி நிறைவேறாத காரணமென்ன? அவ் அம்மாளுக்கு வந்த இடைஞ்சலென்ன? சுருக்கமாய் எனக்கு அறிவிக்க மன்றாடுகிறேன். இன்னும் நீ செய்யவேண்டியதொன்றுண்டு அஃதென்னவென்றால், இவ்வூரிலும் இன்னும் சிலவூர்களிலும் இருக்கும் கற்றவர்கள் தங்கள் பெண்டுகளையெல்லாம் இளந்தாரிகளாலுந் துற்குணராலும் நிறையப்பட்ட தமிழக்கோவில்களுக்குப் போகச் சந்தோஷமாய் விடுகிற பெற்றபிதாவைப் போல நீதவானாலும் படிப்பாளிகளாலுஞ் சற்குணசாலிகளாலும் நிறையப்பட்டிருக்குங் கோடுகச்சேரி முதலிய இடங்களுக்கு யாதொன்றுக்கும் போகவிடாமல் மறித்துத் தங்கள் ச

நகையைக் காத்துக்கொள்ளுகிறோமென்றுதிரியும் வீணர்களைப் பற்றிச் சிறிது வசனங்களைப் பேச இடந்தருவாயோவென்றெனக்கறிவி?

இப்படிக்கு

௲௮௱௪௨ ஆ ஆடி மீ ௰௮ தீ — உனதுதோழி

கொழும்புத்துறை — சின்னச்சிப்பிள்ளை.

என்னருமைத்தாரகையே,

உன் மூலமாயென்னைப் பற்றி விளவும்புலவர்களின்னுமுண்டா? உண்டானால் மற்ற மற்றச் சஞ்சிகைகளில்க்கொண்டுவா—கொண்டுவந்தால அந்தந்தப் புலவர்களுக்குமடுத்தவிடையை ஒரே முறையிற் கொடுப்பேன் அவர்களெடுத்தவெடுப்பையுந் தடுப்பேன "கற்றறிவிலாயபயனென்கொல்வாலறிவனற்றொழாரேயெனின்."

இப்படிக்கு — உனதுதோழி

யாழ்ப்பாணநகர் — உரைகல்லு

(On the pretended Miracles of the Heathen)

கனம்பொருந்திய உதயதாரகைப் பத்திராதிபரே,

தமிழர் வழிபாடுபண்ணுகின்ற தேவர்கள் மெய்த்தேவர்கள் அல்லவென்றும அவர்கள் மோட்சகதி பெறும்படி செய்யுங் கிரியைகள் அவமென்றும் பாதிரிமார் பற்பல புஸ்தகங்களிலுங் காட்டிய நியாயங்கள் சரிதானென்று அவர்கள் சொல்லியும் இன்னுந் தாங்கள் பூசித்துவருகிற விக்கிரகங்களாலப் புதுமைநடக்கிறதென்றும் மந்திரஞ் சித்தியாகிறது மெய்யாயிருக்கிறதென்றுஞ் சொல்லிப புத்தியீனமாய அவையே தங்கள் வேதம மெய்யெனபதற்கு அத்தாட்சியென்று விக்கிரக பத்தியைவிடாமற் கொண்டாடுகிறார்கள ஆதலால, விக்கிரகங்கள் புதுமைசெய்கிறதில்லையென்று தமிழர் உணரும்படி சில நியாயங்களை இச் சஞ்சிகைப் பத்திரிகைவழியாய்ப பிரசித்தஞ்செய்து பின் வருஞ்சஞ்சிகையில மந்திர தந்திரத்தைபபற்றிச் சில காரியங்களைக் காட்டும்படி விரும்புகிறேன.

விக்கிரகங்கள் புதுமைசெய்கிறதில்லையெனபது.

தமிழர் தங்கள் விக்கிரகங்கள் செய்கிற புதுமைகளென்னவென்று சொல்லுகிறார்களேயாகில சிலர் அநேககாலம பிள்ளையில்லாமல இருந்து நாக பிரதிஷ்டையும உருத்திராபிஷேகமுஞ் செய்யப் பிள்ளைபெறுகிறார்கள். சிலர் கொடிய வியாதியினால சாக ஏதுவாயிருந்து தாங்கள் முருகமூர்த்தியினுடைய கோயிலைச்சுற்றிக் கும்பிட்டடியழித்து இலிங்காதாரிகளினால சங்குநாதம பண்ணுவித்து அவர்களுக்கமுது கொடுப்போமென்று நேர்த்திசெய்ய அதுபோல வியாதி நீங்கிப் பிழைத்திருக்கிறார்கள். கண்ரோகம வந்து செய்யாத பரிகாரமெல்லாஞ் செய்தும மாறாமல அம்மாளுக்குக் கண்மலர்செய்து தருவோமென்று பொருத்தனைசெய்யக் கண்வருத்தம நீங்குகின்றது காய்ச்சலவந்து ஒன்றுக்குந் தீராமற், பிள்ளையாருக்கு மூன்றுதேங்காயுமடித்து முப்பத்திரண்டுதோப்புக்கண்டமும போடுவோமென்று பிரார்த்திக்கக் காய்ச்சல விட்டுப்போகின்றது. பிள்ளைகளுக்கு அக்கரமுதலிய பிணிவந்துக்கும் போதில, வள்ளிநாயகிக்கு ஏழுவீட்டில மடிப்பிச்சையெடுத்து ஏழு சிறுபெண்களுக்குச் சருக்கரை அமுது கொடுப்போமென்று வேண்டுதலசெய்ய அதுபோலச் சுகப்படுகிறார்கள். இன்னுமிப்படியே அளவிறந்த புதுமைகள் நாடோறும நடக்கின்றனவென்கிறார்கள் இவ்வகைய புதுமைகள் பொன், வெள்ளி, செம்பு, கல், மண் மரமுதலியவைகளினுலியற்றிய வுருவங்களினால நடக்கின்றனவென்றும நம்புகிறார்கள் இது மெய்யேயானால உரோமான்வேதக்காரருந் தங்களுக்கு வியாதி நோவுமுதலிய இக்கட்டுகள் சேருங்கால தங்கள் சுத்தவானருடைய உருவங்களுக்கு முடிமாலை, வாள், மெழுகுதிரி, தென்னம்பிள்ளை, அள்ளுபணம முதலானவைகளைத் தங்கடங்கள் இயல்புக்குத்தக்கதாகத் தருவோமென்று நேர்த்திக்கடன்செய்து அவர்களும அப்படிச் சித்திகாணகிறார்களென்றுசொல்லுகிறார்கள். அதுபோல இஸ்லாமார்க்கத்தாரும் அந்தந்தத் தலங்களிலே அடக்கமபண்ணப்பட்டிருக்கிற தங்கள் சாய்புகளைப் பிரார்த்தித்து அனுகூலப்படுகிறார்களென்றுஞ் சொல்லுகிறார்கள் இவைகளெல்லாரும புதுமைகள்செய்தால பின்னை எல்லாவேதமும மெய்யானவேதமென்று சொல்லவேண்டுமே அதைத் தமிழர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஏனெனில நம்பினவனுக்கு எல்லாந்தெய்வங்களாயிருக்கிறதென்று சொல்லித் தங்கள தேவர்களாற் சகாயமடையாதிருக்கும்போது மற்றும்மார்க்கத்தவர்களுடைய உருவங்களையும் பீராசாய்பு முதலானவர்களையும பிரார்த்திக்கிறார்கள் இப்படி எல்லாவேதமும மெய்யென்று தமிழர் ஏற்றுக்கொள்வதுபோல உரோமான வேதக்காரரும ஏற்றுக்கொள்ளுகிறார்களோ இல்லையே. இஸ்லாமார்க்கத்தாரும் அப்படிச்சொல்லச் சம்மதிக்கவில்லையே அவர்கள் தங்கள் மார்க்கந்தவிரச் சைவசமயம், உரோமானமார்க்கம, இறப்பிறமாது வேதமுதல மற்றுமுண்டான எல்லா மதங்களும இபிலீசினாலும்ப சாசினாலுமுண்டான மதங்களென்று சொல்லுகிறார்களே. ஆனதால இவ்வகைப் புதுமைகளைக்கொண்டு தங்கடங்கள் வேதம் மெய்யென்று எண்ணப்படாது

எந்தெந்தவேதக்காரரிலும் வியாதிநிரப் பிரார்த்தித்துச் சுகப்படுகிறதுமுண்டு சுகப்படாமற்போகிறதுமுண்டு. நேத்திரவியாதி வந்து குணமாகிறதுமுண்டு, குணமில்லாமற்போகிறதுமுண்டு நெடுநாட் பிள்ளையில்லாமலிருக்கிறதுமுண்டு, பின பிள்ளைபெறுகிறதுமுண்டு. அவரவர் எண்ணினகருமஞ் சித்தியாகிறதுமுண்டு அசித்தியாகிறதுமுண்டு இச்செய்கையானது சருவத்திற்குங் காரணக்கடவுளாகிய தேவனுக்குரித்தேயன்றி விக்கிரகங்களுக்காவது கிரகதாரைகளுக்காவது இறந்துபோன சுத்தவாளரின உருவங்களுக்காவது இஸ்லாமார்க்கத்தாரின் சாய்புகளுக்காவது உரித்தென்றுசொல்லப்போகாது.

விக்கிரகங்களினால் இவை சம்பவிக்கிறதென்று எண்ணுகில அவ்விக்கிரகங்களின கண்ணை அல்லது மூக்கை அல்லது கை காலை இயாதொருவன் கெடுத்துப்போடும்பொழுது அவைகள் தங்கள் சுயவல்லமையினால முறிந்துபோனவைகளைத் திரும்பச் சீர்ப்படுத்திக் கொள்ளுகின்றனவோ? அல்லது தங்களுக்கு அக்கேட்டைவருவித்தவனைத் தண்டிக்கின்றனவோ இப்படிச்செய்யக் காணோமே. மட்டைக்களப்பிலே இறைக்கு இரண்டு வருடத்துக்குமுன இவ்வகைப் புதுமைசெய்கிறதென்று நம்பியிருந்த அநேகவிக்கிரகங்களைக் கள்வர் கெடுத்தும அவைகளிலிருந்த பொருளைக் கொள்ளையாடியும அவர்கள் இயாதொரு தண்டனையுமடையாமற் சுகமே வாழ்ந்திருக்கிறார்களென்று இவ்வூர்த் தமிழரும அதை அறிந்திருக்கிறார்களே. ஆனதால தங்களுக்குவருகிற ஆபத்தைத் நீக்கமாட்டாதவர்கள் மற்றும்பேர்களைக் காப்பாற்றி அவர்களுக்குத் தேவையான உபகாரங்களைக் கொடுக்கிறார்களென்று நம்புகிறது புத்தியீனமல்லவா?

மேலுஞ்சிலர் எண்ணுவார்கள் விக்கிரகங்களையும இறந்துபோன சுத்தவாளரையும நம நோக்கிய பிரார்த்தித்துக்கொள்ளுங் காரியத்தைச் சிலபோதாகுதல நமக்குச் சித்திக்கத் தேவன் சித்தமாகிறாரே ஆனதால விக்கிரகங்களையுஞ் சுத்தவாளரையும பிரார்த்திக்கிறது பாவமல்ல, அவர்களையும வழிபாடுபண்ணலாமென்று எண்ணுவீர்களாகில சோருகள் கள்வர், தூர்த்தர், குடியர், கொலைபாதகர் முதலான தீயவர்கள் தாந்தாம இச்சித்தவைகளை அடைவதினால அவர்கள் செய்யும பாதகங்கள் பாவமல்லவென்று சொல்லுவீர்களா? இல்லையே அப்படியே இதுவுமிருக்கின்றது. விக்கிரகங்களையுஞ் சுத்தவாளரையும பிரார்த்தித்துத் தாந்தாம இச்சித்தவைகளைப் பெற்றுக்கொள்வதினால விக்கிரகபத்தியுஞ் சுத்தவாளர் வணக்கமும பாவமல்லாமற்போகாது

இன்னும வியாதிவந்து திருந்தலுஞ் சிலகாலம் பிள்ளையில்லாதிருந்து பின பிள்ளைப்பெறுதலும மற்றும விரும்பின காரியஞ் சித்தியாகுதலும புதுமையல்ல. இவை உலகத்திலே இயல்பாய நடக்கின்றன. ஆனாலும புதுமை எப்படிக்கொத்ததோவெனில எமது இரட்சகராகிய இயேசுவானவர் தமது வார்த்தையினாற் பிறவிக்குருட்டருக்குப் பார்வையளித்து ஊமையரைப் பேசப்பண்ணி முடவரை நடக்கப்பண்ணிப் பசாசுகளை மனிதரிலிருந்து அகற்றிச் செத்தபிரேதங்களை எழுப்பி ஐந்தப்பங்களை ஐயாயிரம்பேருக்கசனமிட்டு மிகுந்தவைகளைப் பன்னிரண்டு கூடைநிரம்ப வெடுக்கச்செய்து தண்ணீரை முந்திரிகைப்பானமாக்கிக் கடுங்காற்றுக் கடலையுமடக்கி அமையவும்பண்ணின இவ்வகைச்செய்கையே புதுமையென்று சொல்லத்தகும

இப்படிக்கு,

மட்டைக்களப்பு — யோவான பிலிப்பு

௲௮௱௪௨ ஆ ஆடி மீ ௭ தீ — யோவான பிலிப்பு

(சொல் வினா)

சங்கதியெனபதென்னை?

இச்சொற்குப் பஞ்சலட்சணம் பகருமின்.

இப்படிக்கு — ஞானமுத்துப்பிள்ளை, நாகமுத்துப்பிள்ளை — இருவர் கையொப்பம்

இ. யா.

No. XI

Through the medium of the *mind* mankind,

(Continued from page 156)

CONCUR—To unite or be conjoined with the opinions of others

DOUBT—To waver or fluctuate in opinion

DEMUR—To delay determination or conclusion

HESITATE—To stop or pause respecting decision or action

SCRUPLE—To hesitate from the difficulty of determining what is right or expedient

WAVER—To be unsettled in opinion.

FLUCTUATE—To be irresolute or undetermined.

DISCERN—To discover by the intellect

DISTINGUISH—To discern critically

APPRECIATE—To value merit

ESTIMATE—To judge and form an opinion of the value

COMPUTE—To cast or estimate in the mind

RATE—To fix the relative value in one's mind by deduction and comparison

RUMINATE—To think again and again

CONFIDE IN—To believe with assurance

EXPECT—To entertain at least a slight belief that an event will happen

ANTICIPATE—To have a previous view or impression of some thing future

TRUST—To rely or rest the mind on the integrity, veracity, justice or friendship of another

AWAIT—To look for or expect

SUSPECT—To imagine to be guilty but upon slight evidence

ACQUIESCE—To be easy about or contented with a thing

COINCIDE—To have oneness of opinion and feeling concerning the same thing

FORESEE—To know an event before it happens

FORGET—To let a thing pass from the memory

வெஸ்லி ஆபிரகாம் என்பவர் பாடிய

தோத்திர ஞானக் கும்மி

கடவுள் வணக்கம்

சீர்ஞானக்கும்மித்தமிழ்பபாடச சர்வசிவதயாபரன்காப்பாமே
பார்ஞானசசத்தியவேதசசுடரெஙகும பாயநதொளிசெயயுமே
ஞானபபெண்ணே ௧

எஙகெஙகுமேயொளியாயருவாகிய வேகபராபரனாகியெலலாந
தஙகுமவா கத்தாமவா கத்தரெலலோரே சஙகீதமபாடு ஞானப
பெணணே ௨

அலலுமபகலுமபராபரனபாதமடுததுவணஙகியேசங்கீதத்தால
அலலேலூயா அலலேலூயாவெனறேயவா ஆநநதமபாடுவாய
ஞானபபெணணே ௩

நிறித்துவமானபரிசுத்தரட்சகா தேசத்திலஞ்ஞானத்தோரை
யெலலாம [னபபெணணே ௪

பொறுத்துரட்சிக்குமவர்கத்தா நலலபுகழினைபபாடுவாய ஞா
னாநதககுணத்தவரநதுகரததவா நாமபாடுபபட்டவாதமபதமே
சேர்ந்திடுஙகிறிஸதவாபாடுஞசஙகீதச சிறபபினைககாணபாயே
ஞானபபெண்ணே ௫

அபபடியெலலாவுலகோரும்போற்றிட எங்குந்நிறையொளிபா
யருவானவை [கோ ஞானபபெணணே ௬

மெயபபடியேயெவர்சொலலத்துணியலாம வேதஞசொலலக
ஆதியிலாழப்புனலமேலேயொளி யாயசைவாடுமபராபரனறுன
மேதினிதனனைபபடைட்புதற்கேசித்தமெத்தவுஙகொணடாரே
ஞானப்பெணணே ௭

ஆநதத்திருசசித்தநதனனிலுறுமவாரத்தை ஆனதுதானே பரா
பரனும
தங்குமபராபரனுயிரட்சகா தானெனதற்புதம ஞானபபெண
ணே ௮

அபபொழுதேகபராபரனவர் அணடபிணடஙகளுடைக்க
வெணணிச [னபபெணணே ௯

செபபிடுமவானமருத்தஙகிநீர்கூவுடன சேரபபடைத்தனர் ஞா
சேருமநீர்தனனைச்சமுத்திரமென றுந் தெரிநதமணகேட்டினப
பூமியெனறுஞ் [ணே ௰

சாருமிரவிமதியுடுபலவிதத் தாலொளியாக்கினர்ஞானபபெண
பகலிரவென றுபிரித்ததற்காகப் பகலினுககாகுமபகலவனும
புகலிரவிற்குச்சசிதாரகையைய பொறிப்பாகவைததார்ஞா
னப்பெணணே ௰௧

இபபடியாகபபலவிதமாகவே யெல்லாம்படைத்தபினறுஞசா
யலாய [பபெ[illegible]ணே ௰௨

செயபபடியாகியமானிடர்தங்களை மேலாகசகணடாரேஞான
அபபொழுதாதாமைபபடைததவனை யசீநதகிநதிரைகொளள
வைதது [ரேஞானபபெணணே ௰௩

ஒபபாயவனவிலாவெலும்பெடுத்துப் பெணணுருவாகச்செயதா
அபபடிபபெணணனவாளை ஆதாமுககுத்துணையாககி
ஒபபுடன தோட்டததிலவனவரைவைத்தே உணமைசிலசொன
னாஞானபபெணணே ௰௪

(இன்னும வரும)

ஆவணி மாதம்.

சாதிய ஆவணி ௰௫ந் தீ முதல புரட்டாதி ௰௪ந் தீ வரைக்கும

E date	தமிழ்த் தேதி	வாரம்	நட்சத்திரம்		திதி.		யோகம்		கரணம்	
15	௧	தி	கே	௪௭ǀ	த	௫௧ǀ	வை	௪௩ǀǀǀ	தை	௨௧ǀǀǀ
16	௨	செ	மூ	௪௯	ஏ	௫௧ǀǀ	வி	௪௧	வ	௨௧ǀǀ
17	௩	பு	பூ	௫௨ǀ	து	௫௩	பி	௩௬ǀǀǀ	ப	௨௨ǀ
18	௪	வி	உ	௫௯ǀǀ	தி	௫௫ǀǀ	ஆ	௩௬ǀ	கவு	௨௪ǀǀ
19	௫	வெ	தி	௬௰	ச	௫௯ǀǀ	சவு	௩௯ǀǀ	க	௨௭ǀǀǀ
20	௬	ச	தி	௧ǀǀǀ	௦	௬௰	சோ	௪௰ǀǀ	வி	௩ ǀǀǀ
21	௭	ஞா	அ	௭ǀǀǀ	௦	௪	அ	௪௧ǀǀǀ	ப	௪
22	௮	தி	ச	௰௪ǀ	பி	௮ǀǀǀ	சு	௪௩ǀ	கவு	௮ǀǀǀ
23	௯	செ	பூ	௨௰ǀǀ	து	௰௩ǀǀǀ	தி	௪௪ǀǀǀ	க	௰௩ǀǀǀ
24	௰	பு	உ	௨௯ǀǀ	தி	௰௮ǀǀ	சூ	௪௫ǀǀ	வி	௰௮ǀǀ
25	௰௧	வி	ரே	௩௧ǀǀǀ	ச	௨௨ǀ	க	௪௫ǀǀǀ	பா	௨௨ǀ
26	௰௨	வெ	அ	௩௯	ப	௨௫	வி	௪௫ǀǀ	தை	௨௫
27	௰௩	ச	பர	௩௯	ஷ	௨௯ǀǀǀ	து	௪௪	வ	௨௯ǀǀǀ
28	௰௪	ஞா	கா	௪௮	ஸ	௨௯ǀ	வி	௪௧ǀ	ப	௨௯ǀ
39	௰௫	தி	ரோ	௪௧ǀǀ	அ	௨௮	அ	௩௮	கவு	௨௮
30	௰௬	செ	மி	௪௧	ந	௨௪ǀ	வ	௩௩ǀǀ	கர	௨௪ǀ
31	௰௭	பு	தி	௩௯ǀǀ	த	௰௯ǀǀǀ	சி	௨௮ǀ	வி	௰௯ǀǀǀ
SEP.										
1	௰௮	வி	பு	௩௭	ஏ	௰௭	வி	௨௨ǀ	பா	௰௭
2	௰௯	வெ	பூ	௩௩ǀǀǀ	து	௰௨ǀ	வ	௰௫ǀǀ	தை	௰௨ǀ
3	௨௰	ச	ஆ	௩௰ǀ	தி	௭	ப	௮ǀ	வ	௭
4	௨௰௧	ஞா	ம	௨௩ǀ	ச	௧	சி	ǀǀǀ	ச	௧
					*	௫௪	சி	௫௨ǀ	சது	௨௭
5	௨௰௨	தி	பூ	௨௨	பி	௪௯	சா	௪௫ǀǀǀ	கி	௨௨
6	௨௰௩	செ	உ	௰௮	து	௪௩ǀ	சு	௩௮ǀ	பா	௰௯ǀ
7	௨௰௪	பு	அ	௰௪ǀ	தி	௩௭ǀǀǀ	சு	௩௧	தை	௰ǀǀ
8	௨௰௫	வி	சி	௰௧	ச	௩௨	பி	௨௪ǀ	வ	௫ǀ
9	௨௰௬	வெ	சு	௮ǀǀ	ப	௨௮ǀǀǀ	மா	௰௮	ப	ǀǀ
									பா	௨௭ǀǀ
10	௨௰௭	ச	வி	௬ǀǀǀ	ஷ	௨௫ǀǀ	வை	௰௨ǀǀ	தை	௨௫ǀǀ
11	௨௰௮	ஞா	அ	௫ǀǀǀ	ஸ	௨௪ǀǀ	வி	௭ǀǀǀ	வ	௨௪ǀǀ
12	௨௰௯	தி	கே	௬ǀ	அ	௨௨ǀ	பி	௪	ப	௨௨ǀ
13	௩௰	செ	மூ	௭ǀǀǀ	ந	௨௨ǀǀ	ஆ	௧	கவு	௨௨ǀǀ
							சவு	௫௮ǀ		
14	௩௰௧	பு	பூ	௰ǀǀǀ	தி	௨௪	சோ	௫௮ǀǀ	க	௨௪

புதனகிழமைச் சங்கிராந்தி நாடி, ௫௭ விநாடி ௨௧ல கன்னிரவி.